அடைக்கல அன்னை சபைத் தலைமையகம் அரண்வாயல் குப்பம்
திருவள்ளூர் மாவட்டம் - 602 025.

சுற்று மடல் எண்: 88 நாள் : 26.11.2021

## என் பாசத்துக்குரிய அருட்சகோதரிகளே!

### நெஞ்சம் நிறைந்து உங்களை அன்போடு வாழ்த்துகிறேன்!

மீண்டும் ஒரு திருவருகைக் காலத்தில் அடியெடுத்து வைக்கிறோம்.
பாரதியின் கவிதை ஒன்று என் நினைவில் வந்து எனக்கு சவால் விட்டது.
அதனை உங்களுக்கும் நினைவூட்டுகிறேன்.

**"தேடிச்சோறு நிதம் தின்று – பல**
**சின்னஞ்சிறு கதைகள் பேசி – மனம்**
**வாடித் துன்பமிக உழன்று – பிறர்**
**வாடப் பலசெயல்கள் செய்து...**
.................................... **- பல**
**வேடிக்கை மனிதரைப் போல – நான்**
**வீழ்வே னென்று நினைத்தாயோ?"**

வாடிக்கையாக வேடிக்கை மனிதராக வாழ்வோமா?
இல்லை பாரதி போன்று சவால் விடப்போகிறோமா?
என்பது நம்முன் வைக்கப்பட்டுள்ள தேர்வு. முடிவு நம் கையில்.

**நாம் வேடிக்கை மனிதராய் வீழப்போவதில்லை எனில்**
**திருவருகைக் காலத்தை மற்றுமொரு**
**அருட்கொடையின் காலமாக ஏற்றுக்கொண்டு**
**நம்மை செதுக்கிக்கொள்ள புதிதாய் வடிவமைத்துக்கொள்ள முயல்வோம்.**

### திருவருகைக் காலம் எப்போதும் கோணல் பாதைகளை நேராக்க சவால் விடுகிறது.

அடுத்தவரைத் திட்டும்போது 'சரியான கோணல்புத்தி' என்று வசை கூறுகிறோம்.
அந்தக் கோணல் புத்தியில் எத்தனை விழுக்காடு என்னிடம் உள்ளது என அலசிப் பார்ப்போம்.
எந்த ஒரு செயலானாலும் எடுத்த உடன் அதன்
எதிர்மறை பக்கங்கள் தான் சிலருக்கு நினைவுக்கு வரும்.
அதையே வெளிப்படுத்தவும் செய்கிறோம்.

அவ்விதமே அடுத்தவரைப் பற்றி எண்ணும் போதும்
பேசும் போதும் அவர்களைப் பற்றிய எதிர்மறையே மேலோங்கி வெளிப்படுகிறது.
இத்தகைய நம் கோணலை சரியாக்க நேராக்க முயற்சி மேற்கொள்வோமா?

## கரடு முரடானவை சமமான வழியாக வேண்டும்:

'கரடு முரடா பேசுகிறார்' என்று சொல்வதில்லையா
அப்படி எனில் இங்கிதம் தெரியாது பேசுவது
நாகரீகமற்ற கடின வார்த்தைகளைப் பயன்படுத்துவது
அடுத்தவர் சகித்துக்கொள்ள இயலாத குரலில் உரக்கக்கத்துவது
சில சமயங்களில் அமைதியாய் அழுத்தமாக அடுத்தவரைத் தொந்தரவு செய்வது
இவை எல்லாம் மூட்டை கட்டி அனுப்புவது எப்போது?
நாம் வேடிக்கை மனிதரா வீழ்வதற்கு!

## பள்ளத்தாக்குகள் நிரப்பப்பட வேண்டும்:

நிரப்பப்படாத பள்ளங்களை நம் வாழ்வில் கண்டுகொள்வோம்.
நமது இறை உறவு என்ற வங்கி நிரப்பப்படாமல் இருக்கிறது அல்லது காலியாக உள்ளது.
நமது பண்பு நலன்கள் புண்ணியங்கள் அடங்கிய கலன் வெறுமையாக உள்ளது.
நேர்மறை சிந்தனைகள் என் பாத்திரத்தில் குறைவாக இருக்கிறது.
இவற்றையெல்லாம் நிறைவடையச் செய்ய நான் என்ன செய்யப்போகிறேன்?

## மலை குன்றுகள் தாழ்த்தப்படுக:

பல சமயங்களில் மலைகளில் ஏறி உட்கார்ந்து கொண்டு
அடுத்தவர் பள்ளத்தில் இருப்பதாக தீர்ப்பிடுகிறோம்.
நாம் இறங்கி வருவதற்குப் பதில் எல்லோரும் என் நிலைக்கு உயரவில்லை
என்ற அகந்தை என்னில் வெளிப்படுகிறது.
என்னைத் தவிர மற்ற அனைவரும் தகுதியற்றவர் என்ற
பேச்சும் சொல்லும் அவ்வப்போது வெளிப்படுகிறதே.
நான் மட்டும் உண்மை, புனிதத்தின் மொத்த உருவம் என்று பிதற்றுகிறோமே
என்னைப் போல் அறிவு, அழகு, திறமை, செயல்திறன்
யாருக்கும் இல்லை என்று மார்தட்டிக் கொள்கிறோமே.

எப்போது இறங்கிவரப் போகிறோம்?
எப்போது நம் குன்றுகள் தாழ்த்தப்படும்?

## அன்புக்குரியவர்களே,

வேடிக்கை மனிதராய் வீழப்போகிறோமா? இல்லை

**ஒளி படைத்த கண்ணினாய்**

**உறுதிகொண்ட நெஞ்சினாய்**

**களிபடைத்த மொழியினாய்**

**கடுமை கொண்ட தோளினாய்**

**தெளிமை பெற்ற மதியினாய்**

**எளிமை கண்டு இரங்குவாய்**

என்ற பாரதியின் ஞானம் பெற்ற பெண்டிராய் மாறப் போகிறோமா?
தேர்வு உங்கள் கையில்...

வாய்ப்புக்களைத் தவற விட்டு விட்டு
விழியிழந்தோராய் வழியில் உட்கார்ந்து
புலம்பும் நிலை நமக்கு வேண்டுமா?

**காலத்தே பயிர் செய்வோம்**

**கருத்தாய் திருவருகைக் காலத்தில் விதைப்போம்.**

**கிறிஸ்துமஸ் காலத்தில் மகிழ்ச்சியை, அன்பை,**

**அமைதியை, நிறைவை அறுவடை செய்வோம்.**

## சகோதரிகள் கவனிக்க:

- நமது பொதுப் பேரவைக்கான குழும கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துக்களை உரிய நேரத்தில் தொகுத்து அனுப்பியதற்காக உங்கள் அனைவரையும் அன்போடு பாராட்டுகிறேன். தனிப்பட்ட முறையிலும் சகோதரிகள் கருத்துக்களை எழுதி அனுப்பியுள்ளனர் அதற்காக உங்களுக்கு நன்றி கூறுகிறேன்.

- பொதுப் பேரவை தயாரிப்பு என்பது ஏதோ ஒருநாளில் நிறைவு பெறும் ஒன்றல்ல. தொடர்ந்த தயாரிப்பும், சுயஆய்வும், தன்னிலை மாற்றமுமே பேரவையை வெற்றி பெறச்செய்யும்.

- சபையின் சிறப்பு என்பது சபைக்கான நிலங்களோ, கட்டடங்களோ, பணமோ, பெரிய நிறுவனங்களோ அல்ல. சபையில் அர்ப்பணத்தில் ஆழம் பெற்ற, துறவு மனப்பான்மையில் வேரூன்றிய, புனிதத்தை இலக்காகக் கொண்ட சகோதரிகளின் எண்ணிக்கையே என்பதைப் புரிந்து கொள்வோம். இந்த எண்ணிக்கை குறைவாக இருந்தால் நம் சபை சிறந்த சபை என்ற அடையாளம் நமக்கில்லை.

- பல சகோதரிகள் உங்களின் உறவினர்களுக்காக அரசு வேலை கேட்டு கடிதம் எழுதியும் நேரில் சந்தித்தும் வேண்டுதல் வைத்திருக்கிறீர்கள். உங்களுக்கு உதவ தற்போது என்னால் இயலவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். **அரசு புதிதாக ஆசிரியர் நியமனத்திற்குத் தடைவிதித்து ஆணை பிறப்பித்துள்ளது**. அந்த ஆணை இணையம் முழுக்க வைரலாகி உள்ளதால் உங்கள் கவனத்திற்கும் வந்திருக்கும் என்று இதைப்பற்றி எதுவும் நான் குறிப்பிடவில்லை. ஆனால் சில சகோதரிகள் தங்களின் வேண்டுதல் பரிசீலிக்கப்படாதது போன்று உணர்வது அறிந்து வருந்துகிறேன். 'யாராவது உதவி கேட்டு அதை என்னால் செய்ய இயலவில்லை எனில் அது எனக்கு வருத்தம் தரும்'. அரசின் தடையால் யாருக்கும் உதவ இயலாமல் இருப்பது வருத்தமாக இருக்கிறது. இந்த சிக்கல்கள் தீர தொடர்ந்து செபிக்க அன்போடு கேட்டுக்கெள்கிறேன்.

- **2021 டிசம்பர் 10, 11 ஆகிய நாட்களில் நமது விளார் கல்லூரிக்கான**

**NAAC Second Cycle Visit நடைபெற உள்ளது.**

**தயவு செய்து உங்கள் செபத்தில் சிறப்பாக நினைவுகூற கேட்டுக்கொள்கிறேன்.**

## வெள்ளிவிழா, பொன்விழாக் கொண்டாட்டங்கள்:

இந்த ஆண்டு பொதுப்பேரவையை முன்னிட்டு நமது வெள்ளி, பொன் விழாக்கள் பிப்ரவரியில் கொண்டாடப்படுகிறது.

**2022 பிப்ரவரி 15 அன்று பொன்விழாவும், பிப்ரவரி 16 அன்று வெள்ளி விழாவும் நமது விளார் கல்லூரி வளாகத்தில் கொண்டாடப்படுகிறது**

என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

## வாக்காளர் அடையாள அட்டை

சகோதரிகள் சிலர் வாக்காளர் அடையாள அட்டையை வீட்டு முகவரியில் வைத்துக் கொண்டு ஓட்டுப்போட வீடுகளுக்குச் செல்வது சரியான அணுகுமுறையல்ல. எனவே வீட்டு முகவரியில் அடையாள அட்டை வைத்திருக்கும் சகோதரிகள் உடனடியாக தாங்கள் தற்போது உள்ள இல்லத்து முகவரியில் படிவம் பூர்த்தி செய்து கொடுத்து வாக்காளர் அட்டையைப் பெற வேண்டும். வீடுகளில் உள்ள வாக்காளர் பட்டியலிலிருந்து உங்கள் பெயர்களை நீக்கம் செய்யுங்கள். இல்லத் தலைமைச் சகோதரிகள் உங்கள் இல்லத்து சகோதரிகளின் வாக்காளர் அடையாள அட்டையின் நகல் எடுத்து வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

## சபைத் தலைமை அன்னையின் டிசம்பர் மாதப் பணித்திட்டம்

| | | |
|---|---|---|
| 01 – 02 | - | சபைத் தலைமையகம் |
| 03 – 11 | - | விளார் கல்லூரி |
| 04 | - | Mock NAAC visit |
| 06 | - | Bethania மற்றும் Local Thanjavur சகோதரிகளோடு கிறிஸ்துமஸ் வாழ்த்துப் பகிர்வு |
| 10 – 11 | - | NAAC Visit – Vilar College |
| 12 – 20 | - | சபைத் தலைமையகம் - அலுவலகப்பணிகள் |
| 21 | - | கிறிஸ்துமஸ் வாழ்த்து மயிலை, நாசரேத் மற்றும் பூவிருந்தவல்லி இல்லங்கள் |
| 22 – 23 | - | கிறிஸ்துமஸ் விழா மகிழ்ச்சி பகிர்வு சபைச் சகோதரிகளுடன் - சபைத் தலைமையகம் |
| 24 | - | கிறிஸ்து பிறப்பு விழா தயாரிப்பு – அமைதி நாள் |
| 25 | - | கிறிஸ்து பிறப்பு விழா – சம பந்தி |
| 26 | - | கிறிஸ்துமஸ் விழா மகிழ்ச்சி பகிர்வு அடைக்கலச் செல்வங்களுடன் - சபைத் தலைமையகம் |
| 28 | - | கடவெண்டி இல்லப்பார்வை |
| 29 – 31 | - | சபைத் தலைமையகம் |

**தொடர்ந்து திருவருகைக் காலத்திற்கான தயாரிப்பில் ஈடுபட்டு**

**மேலும் மேலும் நமக்கு மெருகூட்டுவோம். கிறிஸ்து பிறப்பு**

**பெரும் வரப்பிரசாதமாக அமைய நம்மையே பக்குவப்படுத்துவோம்**

**HAVE A BLESSED ADVENT SEASON**

**FULL OF JOY AND LOVE!**

**அக ஒளியின் பாதையில்**

Sr. Maria Philomi FBS

**சபைத் தலைமை அன்னை**